மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை : திரு.R. மணிவர்மன், பி.ஏ., பி.எல்., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2024 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 06 ஆம் நாள் வியாழக்கிழமை
அசல் வழக்கு எண்.172/2021
**CNR.No.TNSA170002162021**

1. கார்த்தி
2. சாந்தி
3. தனபாக்கியம் ---வாதிகள்

/இடையே/

1. வேலுசாமி
2. ராஜி ---பிரதிவாதிகள்

இவ்வழக்கு கடந்த 27.03.2024 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு, வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.குழந்தைவேல் அவர்கள் ஆஜராகியும், 1ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.M.K.அர்ஜீணன் அவர்கள் ஆஜராகியும், 2ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.S.காமராஜ் அவர்கள் ஆஜராகியும், 2ம் பிரதிவாதி தரப்பில் பதிலுரை தாக்கல் செய்தும், எழுவினாக்கள் வனையப்பட்டும், வழக்கு வாதி தரப்பு விசாரணைக்காக வைக்கப்பட்டிருந்த நிலையிலும், வாதி தரப்பில் பிற்பகல் 3.00 மணிவரையிலும், எவ்வித எடுத்துரைப்பும் இல்லாததாலும், வாதி நீதிமன்றத்தில் ஆஜராகாததாலும், இதுநாள் வரை ஆய்வில் இருந்து வந்த மேற்படி வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்.

## தீர்ப்புரை

**Suit for Declaration and Permanent Injunction Mandatory Injunction:–** தாவா தடத்தை வாதிகள் உபயோகிக்க உரிமையுள்ளது என விளம்புகை செய்தும், பிரதிவாதிகளோ அவர்களது ஆட்களோ தாவா தடத்தை எவ்வகையிலும் தடுக்க கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பிறப்பித்தும், பிரதிவாதிகள் தாவா தடத்தில் ஆக்கிரமிப்பை செயலுறுத்துக்கட்டளை மூலம் நீக்கி தரபும், தாவா செலவுகளை வாதிகளுக்கு பிரதிவாதிகள் வழங்கிட வேண்டும் எனவும் மற்றும் சமூகம் நீதிமன்றத்தாருக்கு நியாயமாயும் உசிதமாயும் தோன்றும் சகல பரிகாரங்களுக்கும் தீர்ப்பு செய்து தீர்ப்பாணை பிறப்பிக்க வேண்டி வாதிகள் வணக்கமாய் பிரார்த்திக்கின்றார்கள்.

வாதி தரப்பில் பிற்பகல் 3.00 மணிவரையிலும், எவ்வித எடுத்துரைப்பும் இல்லாததாலும், வாதி நீதிமன்றத்தில் ஆஜராகாததாலும், வாதியின் வழக்கு செலவு தொகையின்றி தள்ளுபடி செய்யப்படுகிறது என தீர்ப்பளிக்கப்படுகிறது.

2024 ம் ஆண்டு ஜீன் மாதம் 06 ஆம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப்பகரப்பட்டது.

ஒம்/-திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.